# வேளாண் வணிகம்


உழவர்களின் நண்பன் – கையடக்க தகவல் களஞ்சியம்

வழி:001 | துணை:006 | ஜூலை01, 2026–சென்னை–600 073

சென்னையிலிருந்து நாடு முழுதும் தொடர்பில் இருக்கும் துணைவன் | மாதம் இருமுறை வெளிவரும் மின் இதழ்




## தேனீ வளர்ப்பு

முக்கிய தொழில் முனைவு வாய்ப்பு

## வேளாண் ஏற்றுமதியில் தேவைப்படும் கொள்கை மாற்றங்கள்...



## ஆசிரியர் குழு

ஆசிரியர்

**அக்ரி இராம. சுப்பிரமணியன்**

*மூதறிவியல் (வேளாண்மை), முதுகலை (அரசியல்), இதழியல் (சான்று )*

புகைப்படம் | வடிவமைப்பாளர்

**அ.ச.ஜோ. அலாய்சியஸ்**

*முதுகலை (பொருளியல்), முதுகலை (இதழியல்), காட்சி தொடர்பு (முதுகலை பட்டயம்)*

துணை செய்தி ஆசிரியர்

**பா.ராஜா முருகுசெழியன்**

*துணை செய்தி ஆசிரியர், (ஓய்வு), தினமணி ஆசிரியர்*

இணை ஆசிரியர்

**முனைவர் தி.ராஜ் பிரவின்**

*இணைப் பேராசிரியர் (வேளாண்மை விரிவாக்கம்), தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைகழகம்*

வெளியீட்டாளர் **இரா.மாணிக்கவாசகம்**

*இளங்கலை (வணிகவியல்)*

**விளம்பரம் /செய்தித் தொடர்புக்கு அணுகவும் : 8056305483**

**ஆராய்ச்சி மாணவர்களின் கட்டுரைகளும் வரவேற்கப்படுகின்றன.**

# ஆசிரியர் பக்கம்

## தாங்க முடியலடா சாமி!!

*அதிதீவிர வெப்ப அலைகள் – மற்றும் அதன் விளைவுகள் குறித்து மத்திய – மாநில அரசுகள் இன்னும் பொது மக்களுக்கோ விவசாயிகளுக்கோ "விழிப்புணர்வு" ஏற்படுத் தியதாகக் தெரியவில்லை இருப்பினும் "வேளாண் வணிகம்" மின்னிதழ் மூலம் "சூப்பர் எல் நினோ" குறித்த தகவல்களை பரிமாறிக் கொள்கிறோம். வெப்ப அலைகளின் தாக்கம் 2027 பிப்ரவரி மாதம் வரை நீடிக்கலாம், தென் மேற்கு வடகிழக்கு பருவ மழைகள் பொய்த்துப் போய் ஒரு வறட்சியான காலக்கட்டத்தைக் காட்டப்போகிறது.*

**விவசாயிகள் தண்ணீர் தேவை.. குறைவான பயிர்களை மட்டுமே பயிரிட வேண்டும்.**

**இரசாயன உரம் , பூச்சிக் கொல்லி மற்றும் களைக் கொல்லிகளை தவிர்த்திடல் நன்று.**

### நீரின்றி அமையாது உலகு

*சந்திரனிலும் செவ்வாய் கிரகத்திலும் தண்ணீரைத் தேடும் நம்ம விஞ்ஞானிகளுக்கு உள்நாட்டிலேயே தண்ணீர் இல்லை என்ற தகவல் தெரியாதா? செயற்கை முறையிலே மழை பெறுவதற்கான ஆய்வுகள் பெரிதாக முன்னெடுக்கப்பட வேண்டும். தண்ணீர்த் தணிக்கை முறை உடனடியாக (WATER AUDIT) அமுல்படுத்தி.. தண்ணீர் தேவையில்லாமல் வீணாவதைத் தவிர்க்க வேண்டும்.*

### மண்ணோடு மண்ணாய்ப் போன மனித வளம்!

*ஓட்டுக்காக நாட்டைக் குட்டிச் சுவராக்கிய அரசியல் கட்சிகள் "இலவசங்களை" நிறுத்தி உழைப்பதை ஊக்குவித்து உணவு உற்பத்தி செய்பவரையும் வாழ வைக்கலாமல்லவா? தமிழகத்தில் விவசாய வேலை களுக்கு இயந்திரங்கள் மட்டுமல்ல இந்திக்காரனு களை விட்டா வேறு வழியில்லையா? நீங்களும் உங்க கொள்கையும்!! வாரீர்!!!*

*அன்புடன் தங்கள் ஆதரவுடனும் பங்கேற்புடனும்..!*

ஆசிரியர்

**அக்ரி. ஆர்.எம். சுப்ரமணியன்**




**மு.தில்ஷா** (நான்காம் ஆண்டு இளங்கலை மாணவி) மற்றும்
முனைவர். **கீ. இரா. மணிகண்டன்**
(உதவிப் பேராசிரியர்,பூச்சியியல் துறை)
தந்தை ரோவர் வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி நிறுவனம் ,பெரம்பலூர்

## அறிமுகம்

*தேனீ வளர்ப்பு என்பது தேனீக்களை வளர்த்து, தேன் மற்றும் பிற பயனுள்ள பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிலாகும். இன்றைய காலத்தில் இயற்கை உணவுப் பொருட்கள் மற்றும் ஆரோக்கியப் பொருட்களுக்கு அதிக தேவை ஏற்பட்டுள்ளதால் தேனீ வளர்ப்பு முக்கிய தொழில்முனைவு வாய்ப்பாக வளர்ந்து வருகிறது. தேன் மட்டு மல்லாமல் பல மதிப்பூட்டப்பட்ட பொருட்கள் மூலம் கூடுதல் வரு மானம் பெற முடிகிறது.*

## தேனின் மருத்துவக் குணங்கள்

- *தேன் ஓர் அமிர்தமாகும் செரிமானச் சிக்கல்கள், வயிற்றுப் புண், சளி, இருமல், வாய் மற்றும் நாக்குப் புண் ஆகியன தேனால் குணமாகும்.*
- *இரத்தத்தைச் சுத்திகரிக்க, இரத்தச் சிவப்பு அணுக்களை உறுதிப்படுத்த, தேன் உதவும்.*
- *இதய மற்றும் நீரிழிவு நோயாளி களுக்கு, தேன் சிறந்த மருந்தாகும்.*

## மதிப்பூட்டப்பட்ட பொருட்கள்

- *தேன்*
- *தேனீ மெழுகு*
- *ராயல் ஜெல்லி*
- *தேனீ மகரந்தம்*
- *ப்ரோபாலிஸ் (பிசின்)*
- *தேனீ நஞ்சு ( விஷம்)*

# Rithvik Pipe

BIS
IS 4985 : 2021 CML-6400119610
IS 9537 CML-6400121694



DON'T JUST BUY A PIPE, BUY PEACE OF MIND ALONG WITH IT.

- **25 YEARS WARRANTY** A Symbol of Trust
- **67 GRADE RAW MATERIALS** Superior Strength, Long Life
- **100% LEAD-FREE** Healthy Water, Healthy Life
- **TEST CERTIFICATE - QR CODE** Download directly from every pipe
- **ISI CERTIFIED PIPES** The True Mark of Quality
- **FREE ON-SITE TESTING** Post-sale quality verified right in front of your eyes
- **ISI EXCLUSIVE PIPE MANUFACTURER** The ultimate symbol of quality
- **ACCURATE WEIGHT & THICKNESS** An Authentic Product (No Compromise)

## PRODUCT RANGES

- ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes)
- ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80)
- ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy)
- ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG)
- ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / ISI PVC FITTINGS
ISI LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

For Dealership & Projects Enquiries - 75618 22223, 75618 22224, 96458 77725

## மதிப்பூட்டப்பட்ட பொருட்களின் பயன்பாடுகள் :

### 1. தேன்




*தேன் என்பது தேனீக்கள் மலர்களின் தேன் சாற்றை (Nectar) சேகரித்து, தங்களின் உடலில் உள்ள நொதிகளுடன் மாற்றம் செய்து தேன்கூட்டின் அறைகளில் சேமித்து உருவாக்கும் இனிப்பான இயற்கை உணவுப் பொருளாகும்.*

### பயன்பாடுகள்

- *உணவுப் பொருளாக பயன்படுத்தப்படுகிறது*
- *சளி மற்றும் இருமலுக்கு மருந்தாக பயன்படுகிறது*
- *இனிப்பு வகைகள் தயாரிக்க பயன்படுகிறது*

### மதிப்பூட்டப்பட்ட தயாரிப்புகள்

- *தேன் ஊறவைத்த நெல்லிக்காய்/பழங்கள்*
- *தேன் ஜாம். • தேன் மிட்டாய்*
- *தேன் சாக்லேட் • தேன் சிரப் மற்றும் ஹெர்பல் தேன்*

### 2. தேனீ மெழுகு




*தேன் மெழுகு (Beeswax) என்பது பெண் தேனீக்களால் இயற்கையாக உற்பத்தி செய்யப்படும் ஒரு மெழுகு ஆகும்.இது தேனீயின் அடிவயிற்றில் 4 முதல் 7 வரையிலான பிரிவுகளில் (Segments), உட்புறமாக 4 சோடிகள் (மொத்தம் 8 சுரப்பிகள்) உள்ளன. இது தேன் கூட்டை உருவாக்கவும், தேனை சேமித்து பாதுகாக்கவும் பயன்படுகிறது.*

குறிப்பு : *1 கிலோ தேன் மெழுகு தயாரிக்க, தேனீக்கள் சுமார் 8 கிலோ தேனை உண்ண வேண்டும்.*

### பயன்பாடுகள்

- *மெழுகுவர்த்தி தயாரிப்பு •மரப்பொருள் பாலிஷ் தயாரிப்பு*
- *சோப்பு மற்றும் லிப் பால்ம் தயாரிப்பு*
- *அழகு சாதனப் பொருட்களில் பயன்பாடு*

### 3. ராயல் ஜெல்லி

*ராயல் ஜெல்லி இளம் வேலைக்கார தேனீக்களின் தலையில் உள்ள ஹைப்போபாரிஞ்சியல் சுரப்பி (Hypopharyngeal gland) மற்றும் மண்டிபுலர் சுரப்பி (Mandibular gland) ஆகியவற்றிலிருந்து சுரக்கப் படுகிறது.*

*இது ராணித் தேனீ மற்றும் இளம் புழுக்களுக்கு உணவாக வழங்கப்படுகிறது.*



**குறிப்பு:** *இரத்த சர்க்கரை மற்றும் கொழுப்பு கட்டுப்பாடு ,மூளை ஆரோக்கியம் மற்றும் நினைவாற்றல் ,தோல் பராமரிப்பு மற்றும் இளமைத் தோற்றம்*

### சிறப்பம்சங்கள்

- புரதம் மற்றும் வைட்டமின் நிறைந்தது
- உடல்நல ஊட்டச்சத்து பொருளாக பயன்படுகிறது
- நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க உதவுகிறது

## 4. தேனீ மகரந்தம்



தேனீக்கள் மலர்களிலிருந்து சேகரிக்கும் மகரந்தத் துகள்களை தேன் மற்றும் சிறிதளவு உமிழ்நீருடன் கலந்து உருண்டைகளாக மாற்றியதே தேனீ மகரந்தம் ஆகும்.

தேனீக்களின் பின்கால்களில் உள்ள மகரந்தக் கூடை (Pollen basket / Corbicula) பகுதியில் சேகரித்து கூட்டிற்கு கொண்டு செல்லப்படுகிறது.

### நன்மைகள்

- புரதச்சத்து நிறைந்தது
- உடல் சக்தி அதிகரிக்க உதவுகிறது

## 5. ப்ரோபாலிஸ் (பிசின்)

Propolis தமிழில் தேனீ பசை (அல்லது) தேனீ பிசின் என்று அழைக்கப்படுகிறது.



இது தேனீக்கள் மரங்களின் மொட்டு மற்றும் பட்டையிலிருந்து சேகரிக்கும் பிசின் போன்ற இயற்கை பொருளாகும். இதனை தேன்கூட்டில் உள்ள இடைவெளிகளை அடைக்கவும், கிருமி களிலிருந்து கூட்டைப் பாதுகாக்கவும் பயன் படுத்துகின்றன.

### பயன்பாடுகள்

- கிருமி எதிர்ப்பு மருந்துகள் ,• ஹெர்பல் கிரீம்கள்
- பல் பேஸ்ட் தயாரிப்பு, • காயம் ஆறும் மருந்துகள்

## 6. தேனீ நஞ்சு ( விஷம்)

தேனீ விஷம் என்பது தேனீகளின் கொடுக்கில் (Sting) இருந்து வெளியேறும் ஒரு இயற்கை



திரவமாகும். இதில் மெலிட்டின் (Melittin), அபாமின் (Apamin) போன்ற உயிரியல் செயற்பாட்டு பொருட்கள் உள்ளன.

### பயன்பாடுகள்

- மருத்துவ ஆராய்ச்சிகளில் பயன்படுகிறது
- மூட்டுவலிசிகிச்சையில்பயன்படுத்தப்படுகிறது
- உயர்ந்த மதிப்புமிக்க மருத்துவப் பொருள்

## தொழில்நுட்ப வளர்ச்சி மற்றும் தேனீ வளர்ப்பு

நவீன தொழில்நுட்பங்களின் உதவியுடன் தேனீ வளர்ப்பு மேலும் எளிமையாகி வருகிறது.

## ஸ்மார்ட் தேனீ பெட்டிகள்

- வெப்பநிலை கண்காணிப்பு கருவிகள்
- தானியங்கி தேன் எடுக்கும் இயந்திரங்கள்
- மொபைல் செயலிகள் மூலம் கண்காணிப்பு

## மாணவர்களுக்கு தொழில்முனைவு வாய்ப்பு.

கல்லூரி மாணவர்கள் தேனீ வளர்ப்பை சிறு தொழிலாக தொடங்கலாம். வீட்டுத்தோட்டம் அல்லது சிறிய நிலப்பரப்பில் கூட இதை மேற்கொள்ள முடியும். அரசு மற்றும் வேளாண்மை துறைகள் பயிற்சிகளும் உதவித்தொகைகளும் வழங்குகின்றன

## தேனீ வளர்ப்பில் உள்ள சவால்கள்

- காலநிலை மாற்றம்
- பூச்சிக்கொல்லி மருந்துகளின் அதிக பயன்பாடு
- நோய் தாக்குதல்
- தரமான தேனீ பெட்டிகள் இல்லாமை
- சந்தை வசதிகளின் குறைபாடு

## முதலீடு மற்றும் வருமானம்

- ஒரு தேனீ பெட்டியின் விலை சுமார் *2300–2500 வரை இருக்கும்
- 5 பெட்டிகளுடன் சிறிய அளவில் தொழிலை தொடங்கலாம்
- வருடத்திற்கு ஒரு பெட்டியில் சுமார் 15 கிலோ வரை தேன் கிடைக்கலாம்
- சரியான பராமரிப்பில் லட்சக்கணக்கில் லாபம் பெற முடியும்

## முடிவுரை

மொத்தத்தில், தேனீ வளர்ப்பு என்பது விவசாயத்துடன் இணைந்த ஒரு முக்கிய தொழிலாகும். இது தேன் மட்டுமல்லாமல் பல மதிப்பூட்டப்பட்ட பொருட்களையும் வழங்குகிறது. குறைந்த முதலீட்டில் தொடங்கக்கூடிய இந்த தொழில், நல்ல வருமானத்தையும் வேலை வாய்ப்பையும் உருவாக்குகிறது.

நவீன வாழ்விற்கு, இயற்கையின் கொடை
தேனீ வளர்ப்போம்,
தேனாய் இனிக்கும் வாழ்வு பெறுவோம்!

# அரசு வழங்கும் உயிர்ம வேளாண்மை சான்று பெறுவது எப்படி? மற்றும் அதற்கான வழிமுறைகள்

விவசாயிகள் தங்களின் விளைபொருட்களை உள்நாட்டிலும், வெளி நாட்டிலும் நல்ல விலைக்கு விற்பனை செய்ய பெரிய வாய்ப்பாக உயிர்ம வேளாண்மை சான்று அமைந்துள்ளது. நுகர்வோரிடையே ரசாயன மற்ற உணவுப் பொருட்கள் மீதான ஆர்வம் அதிகரித்து வருவதால், இந்த சான்றிதழ் விவசாயி களுக்குப் புதிய வணிக வாய்ப்புகளை உருவாக் குகிறது.

செயற்கை உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லி களைப் பயன்படுத்தாமல், இயற்கை உரம், பயிர் சுழற்சி மற்றும் உயிரியல் முறைகளைப் பின்பற்றி மேற்கொள்ளப்படும் ஒரு நிலையான வேளாண் முறை உயிர்ம வேளாண்மை . மண் வளத்தைப் பாதுகாத்தல், சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல், இயற்கை வளங்கள் சிதைவடைவதைத் தடுத்தல் மற்றும் அவற்றை மீட்டெடுத்தல், ஆரோக்கியமான உணவு உற்பத்தி செய்தல் ஆகியவை இயற்கை வேளாண்மையின் முக்கிய நோக்கங்களாகும். இயற்கை முறை விளைபொருட்களை உற்பத்தி செய்ய விரும்பும் எவரும், இயற்கை முறைச் சான்றளிப்புத் துறையில் பதிவுசெய்துகொள்வதன் மூலம் உயிர்ம வேளாண்மை சான்று பெற்று கொள்ளலாம். அரசு அங்கக வேளாண்மை (Organic Farming) சான்று பெற, விவசாயிகள் தமிழ்நாடு அரசின் விதைச் சான்று மற்றும் உயிர்மச் சான்றளிப்புத் துறை Department of Seed Certification and Organic Certification இணையதளம் அல்லது அருகில் உள்ள அலுவலகத்தை அணுகிப் பதிவு செய்ய வேண்டும்.

இந்தியாவில் இயற்கை வேளாண்மைச் சான்றிதழைப் பெறுவது ஒரு எளிமையான செயல்முறையாகும். இது APEDA–வின் NPOP திட்டத்தின் கீழ் அரசாங்கத்தாலோ அல்லது PGS–இந்தியா போன்ற உள்ளூர், சமூக அடிப் படையிலான அமைப்புகள் மூலமாகவோ நிர் வகிக்கப்படுகிறது. சிறு விவசாயிகள், உள்ளூர் சந்தைகள் மற்றும் சமூக விற்பனைக்கு பிஜிஎஸ்–இந்தியா பங்கேற்பு உத்தரவாத முறை சான்றிதழைப் பெறுவது மிகவும் சிறந்தது. இயற்கை விளைபொருட்களை ஏற்றுமதி செய்யவோ அல்லது பெரிய தேசிய பல்பொருள் அங்காடிகளில் விற்கவோ விரும்பினால் NPOP (தேசிய இயற்கை உற்பத்தித் திட்டம் முறை சான்றிதழைப் பெறுவது கட்டாயமாகும். புதிய விண்ணப்பதாரராக இருந்தால், இறுதி விளை பொருள் 100% இயற்கை என அங்கீகரிக்கப் படுவதற்கு முன்பு, நிலத்தில் எந்த செயற்கை இரசாயனங்களும் பயன்படுத்தப்படாத 3 வருட மாற்றக் காலம் பொதுவாகக் கோரப்படுகிறது.

தமிழ்நாடு இயற்கை வேளாண்மைச் சான்ற ளிப்புத் துறை' (TNOCD) என்பது இந்திய அரசின் வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள APEDA–வால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு அங்ககச் சான்றளிப்பு அமைப்பாகும். தேசிய இயற்கை உற்பத்தித் திட்டத்தின் (NPOP) விதிமுறைகள் மற்றும் ISO 65 தரநிலைகளின்படி, மாநிலத்தில் இயற்கை உற்பத்தி முறைகளை ஆய்வு செய்து சான்றளிக்கும் பணிகளை மேற்கொள்வதற்காக 'தமிழ்நாடு இயற்கை வேளாண்மைச் சான்றளிப்புத் துறை' (TNOCD) நிறுவப்பட்டது. இத்துறை வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் (APEDA)–வால் அங்கீ கரிக்கப்பட்டுள்ளது. இத்துறையால் சான்றளிக் கப்படும் இயற்கை வேளாண்மைப் பொருட்கள் ஐரோப்பியத் தரநிலைகளுக்கு இணையானவை மற்றும் ஏற்றுமதிக்குத் தகுதியானவை . இது விவசாய விளைச்சலுக்குப் பெரும் மதிப்பைச் சேர்க்கும். சர்வதேச சந்தைகளில் அங்ககப் பொருட்களை எளிதாக விற்க முடியும். விளைபொருட்களுக்கு சாதாரண பொருட்களை விட அதிக விலை கிடைக்கும்.

## சான்றிதழ் பெறுவதற்கான வழி முறைகள்

- தனி நபராகவோ அல்லது குழுவாகவோ (குறைந்தது 25 விவசாயிகள்) விண்ணப்பிக் கலாம். உரிய படிவத்தைப் பூர்த்தி செய்து, பதிவு கட்டணம் மற்றும் ஆய்வு கட்டணத்தை அரசு நிர்ணயித்த கணக்கில் செலுத்த வேண்டும்.

- விண்ணப்பத்துடன் பண்ணையின் வரை படம், மண் மற்றும் பாசன நீர் பரிசோதனை முடிவுகள், மற்றும் இயற்கை இடுபொருட்கள் வாங்கிய ரசீதுகள், பயிர் சாகுபடி பதிவேடுகள், ஆண்டு பயிர் திட்டம் ஆவணங்கள் ஆகிய வற்றை இணைக்க வேண்டும்.
- அதிகாரிகளின் ஆய்வறிக்கைகள் திருப்தி கரமாக இருந்தால், அங்கக வேளாண் உற்பத்தி செய்வதற்கான அதிகாரப்பூர்வ சான்றிதழ் வழங்கப்படும். இந்தச் சான்றிதழை ஒவ்வொரு வருடமும் உரிய ஆய்வுடன் புதுப்பிக்க வேண்டும்.

## கட்டண விவரங்கள்

### விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்புத் துறை

| வரிசை எண் : | விபரம் | புதிய கட்டணம் ரூ. | ஆய்வு மற்றும் சான்று கட்டணம் ரூ. | பயணநேர கட்டணம் ரூ. | வாய்ப்புச் சான்று கட்டணம் ரூ. | மொத்த ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1. | தனிநபர் சிறு. குறு விவசாயிகள் | 500 | 1000 | 200 | 1000 | 2700/- |
| 2. | தனிநபர் பிற விவசாயிகள் | 1000 | 1000 | 200 | 1000 | 3200/- |
| 3. | குழுப் பதிவு | 5000 | 1000 | 200 | 1000 | 7200/- |
| 4. | வணிக நிறுவனம் | 5000 | 2000 | 400 | 2000 | 9400/- |

புதுப்பித்தல் கட்டணம் : 25% பதிவு கட்டணம் + ஆய்வுக்கட்டணம் (ஆண்டுதோறும்) முழுவதும் + பயணநேர கட்டணம் முழுவதும்

முதல் ஆண்டிற்கான பதிவு கட்டணம் செலுத்த தேவையில்லை

- அங்ககச் சான்றளிப்புத் துறை அதிகாரிகள் சான்றளிப்புக் குழு பண்ணைக்கு நேரில் வந்து, அங்கக உற்பத்தி முறைகள் NPOP (National Programme for Organic Production) அல்லது PGS (Participatory Guarantee System) தரநிலைகளின்படி உள்ளதா எனச் சோதனை செய்வார்கள்.
- இயற்கை முறைக்கு மாறுவதற்கு ஒரு குறிப்பிட்ட 'மாறுதல் காலம்' தேவைப்படும். பொதுவாக, ஆண்டுப் பயிர்களுக்கு 3 ஆண்டுகள் வரை இயற்கை வேளாண்மை நடைமுறைகளை முறையாகப் பின்பற்றி சான்றுகளைப் பராமரிக்க வேண்டும்.

தனிநபர் பதிவின் கீழ், சிறு மற்றும் குறு விவசாயி களுக்கு ரூ.500–ம், பிற விவசாயிகளுக்கு ரூ.1000–ம் பதிவுக் கட்டணமாகவும்; அத்துடன் ஆய்வு மற்றும் சான்றளிப்புக் கட்டணமாக ரூ.1000–ம், பயணச் செலவிற்காக ரூ.200–ம் செலுத்தப்பட வேண்டும். குழுச் சான்றளிப்பிற்கு, பதிவுக்கட்டணமாக ரூ.5000–ம், ஆய்வு மற்றும் சான்றளிப்புக் கட்டணமாக ரூ.1000–ம், பயணச் செலவிற்காக ரூ.200–ம் செலுத்தப்பட வேண்டும். அதேபோன்று, பெருநிறுவனத் துறைக்கு பதிவுக்கட்டணமாக ரூ.5000–ம், ஆய்வு மற்றும் சான்றளிப்புக் கட்டணமாக ரூ.2000–ம், பயணச் செலவிற்காக ரூ.400–ம் வசூலிக்கப்படுகிறது.

# உயிர்ம வேளாண்மை சான்று மாடல்

Accreditation No.under NPOP

**NPOP/NAB/0019**

## Certification Characteristics

**ORG/SC/1406/001073 A**

V.T.VALLUVAN, No.23, TAUTA Nagar, Vadavalli, Coimbatore, Tamil Nadu-641041

**Producer Farm(s) Address:**

**1.** Sadguru Sannidi Organic Farms,Vettaikaranpudur, Pollachi, Coimbatore, Tamil Nadu,**Total area:** 10.200000

**Producer product(s):**

| Season | Product S. No. | Product(s) | Organic Status | Variety | Crop Type | Area (in Ha) | Est.Quantity (in MT) |
|---|---|---|---|---|---|---|---|
| Kharif | 1 | Non-Basmati Paddy | Organic | Whiteponni | Main | 1.400000 | 6.000000 |

TamilNadu Organic Certification Department,
3rd Floor, Electronic Complex-III, TANSIDCO, Guindy, Chennai, Tamil Nadu-600032

# Scope Certificate

## Certificate No. ORG/SC/1406/001073

**V.T.VALLUVAN**
**No.23, TAUTA Nagar, Vadavalli, Coimbatore, Tamil Nadu-641041**

Accreditation No.under NPOP
**NPOP/NAB/0019**

This is to certify that the product(s) and area(s) of the mentioned organisation inspected by TamilNadu Organic Certification Department are in accordance with requirements of

**India's National Programme for Organic Production Standards**

**(Considered equivalent to Council regulation (EC)No. 834/2007(Category A & F) and Swiss Organic Farming Ordinance for unprocessed plant products originating in India)**

**For the following process,**
**Production**
**this Certificate is issued.**

**This certificate is valid from 11/06/2025 until 10/06/2026**

**This certificate is valid for those product(s) and area(s) that are specified in the annexe ORG/SC/1406/001073 A.**

**The validity of this certificate solely depends on the continued compliance with the required standards and is subject to annual surveillance inspections.**

**Authorised By:**
M. Jothilakshmi
Quality Manager
Issued Date: 03/09/2025

(253) 0890604993019092025001095

# ஐசிஏஆர்–கரும்பு இனப்பெருக்க நிறுவனம்... ஒரு பார்வை




தமிழ்நாடு கோயம்புத்தூரில் 1912– ல் நிறுவப்பட்ட ICAR–கரும்பு இனப்பெருக்க நிறுவனம், ICAR–இன் கீழ் உள்ள முதன்மையான மற்றும் பழமையான வேளாண் நிறுவனங்களில் ஒன்றாகும். மேம்படுத்தப்பட்ட கரும்பு இரகங்களை உருவாக்குதல் மற்றும் நாட்டில் உள்ள 23–க்கும் மேற்பட்ட கரும்பு ஆராய்ச்சி நிலையங்களின் கரும்பு இனப்பெருக்கத் திட்டங் களுக்கு ஆதரவளித்தல் ஆகிய இரட்டை நோக்கங்களுடன், கடந்த பத்து தசாப்தங்களாக நாட்டின் கரும்பு இரகத் தேவைகளைப் பூர்த்தி செய் வதில் இந்த நிறுவனம் முக்கியப் பங்காற்றி வருகிறது.

இந்தியாவில் கரும்பு திசு வளர்ப்பு நெறிமுறைகளை உருவாக்கிய முதல் நிறுவனங்களில் ICAR–SBI–யும் ஒன்றாகும். திசு வளர்ப்பு மூலம், மாற்றியமைக்கப்பட்ட புறத்தோற்றப் பண்புகளைக் கொண்ட பல சோமா க்ளோன்கள் உருவாக்கப் பட்டன

மகாராஷ்டிரா மற்றும் கர்நாட காவில் வெளியிடப்பட்டு, இது வரை இல்லாத அளவுக்கு அதிக சர்க்கரை மீட்டெடுப்பைப் பதிவு செய்துள்ள Co 94012, பிரபலமான CoC 671 ரகத்தின் ஒரு சோமாக் ளோன் ஆகும். வெளி யிடப்பட்ட ரகங்களை விரை வாகப் பெருக் குவதற்கான நுண் பெருக்க நெறிமுறை உரு வாக்கப்பட்டு, அந்தத் தொழில் நுட்பம் சர்க் கரைத் தொழில் மற்றும் வணி கரீதியான திசு வளர்ப்பு ஆய்வ கங்களுக்கு மாற்றப்பட்டது.

இந்தநிறுவனம்,மரபணுவளங்களை நடுத்தர காலத்திற்கு ஆய்வகத்தில்

சேமித்து வைப் பதற்கான ஒரு நெறி முறை யையும் உருவாக் கியது. நாட்டின் பல்வேறு வேளாண்–கால நிலை களுக்கு ஏற்ற மேம்படுத் தப்பட்ட கரும்பு ரகங்களை உருவாக்கு வதில் ICAR–SBI ஒரு முக்கியப் பங்காற்றியது. வெப்ப மண்டல மற்றும் துணை வெப்ப மண்டல மாநிலங்களில் பிரப லமடைந்த, இந்த நிறுவனத்தால் உருவாக் கப்பட்ட ஏராளமான முக்கிய ரகங்களைத் தவிர, தேசிய



கலப்பின வசதி மூலம் மாநில கரும்பு ஆராய்ச்சி நிலையங்களால் உருவாக்கப்பட்ட ஏராளமான இடத்திற் கேற்ற ரகங்களின் வளர்ச்சிக்கும் இந்த நிறுவனம் பங்களித்தது.

இந்தியாவில் கரும்பு இரக மேம் பாட்டுத் திட்டங்களின் வெற் றிக்கு, எஸ்பிஐ மற்றும் மாநில கரும்பு ஆராய்ச்சி நிலையங்களுக்கு இடை யேயான செயல் திறன் மிக்க ஒத்து ழைப்பே பெருமளவில் காரணமாகும்

முகவரி:–
இயக்குனர்,
ஐசிஏஆர்–கரும்பு
இனப்பெருக்க நிறுவனம், வீரகேரளம்,
கோயம்புத்தூர்–641007

செய்தி தொகுப்பு
வீரபாண்டி கே எஸ் பழனிசாமி
மாநிலத் திட்ட பொறுப்பாளர்
இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சில்
பாஜக விவசாய அணி (95433–73204)



# தொழில்முனைவோர் + பயிற்சியாளர் = கிரிஜா



நாகை மாவட்டத்தில் உள்ள காடாம்தட்டி ஊராட்சி. இது நாகப்பட்டினம்–வேதாரண்யம் இடையே உள்ளது. இக் கிராமத்தைச் சேர்ந்தவர் கிரிஜா செல்வராஜ். இவருக்கு வயது 52. படித்தது என்னவோ ஆறாம் வகுப்பு வரைதான். ஆனால், உலக ஞானம், தொழில் சார்ந்த அறிவைச் சோதனை செய்து பார்த்தால், இவருக்கு முனைவர் பட்டமே அளிக்கலாம். அவ்வளவு விஷய ஞானம்.

இப் பெண்மணி சிறுதானியங்களை கொண்டு பல்வேறு மதிப்புக் கூட்டுப் பொருள்களைத்தயாரித்து,உள்ளூரிலும், வெளி மாநிலங்களிலும் விற்பனை செய்து வருகிறார். அதோடு, தாம் கற்றவற்றை பிறரும் அறிந்து, அவர்களும் தொழில் முனைவோராக வேண்டும் என்ற நோக்கத்தில் அவர்களுக்குப் பயிற்சியளிக்கும் ஒரு பயிற்சியாளராகவும் திகழ்கிறார்.

2019 ஆம் ஆண்டில் மகளிர் குழுவில் சேர்ந்த பின்னர், சிறுதானியங்கள் மூலமும் மீன், நண்டு உள்ளிட்ட கடல் சார்ந்த உயிரினங்களைக் கொண்டும் மதிப்புக்கூட்டுப் பொருள்களைத் தயாரிப்பது குறித்துக் கற்றறிந்தார்.



இதற்கு கிரிஷ் விஞ்ஞான் கேந்திரா போன்ற நிறுவனங்கள், மாவட்ட அளவில் பல்வேறு விழிப்புணர்வு முகாம் களில் கலந்து கொண்டது ஆகியவை இவருக்கு உதவியாக இருந்துள்ளன. பல்வேறு பதார்த்தங்களை எப்படி தயாரிப்பது, அதில் உள்ள நுணுக்கங்கள், தயாரித்த பொருள்களை எவ்வாறு விற்பனை செய்வது, எப்படி சிப்ப மிட்டால், பொருள் கெட்டுவிடாமல் இருக்கும் என்பதை முழுமையாகக் கற்ற றிந்தார்.அறிவை வளர்த்துக் கொண்டார். இச் செயலே அவரை பயிற்சியாளராக மாற்றியது.

நாகை மாவட்டம், கடல் சார்ந்த பகுதி என்பதால், இங்கு மீனவப் பெண்கள் அதிகம். இவர்கள் கடலில் இருந்து பல்வேறு வகையான மீன்களைப் பிடித்து வந்து, வியாபாரியிடம் விற்று விட்டு பணத்தைப் பெற்றுச் செல்வதையே வழக்கமாகக் கொண்டுள்ளனர். இவர் களுக்கு மீனைப் பதப்படுத்தி, அதை தாமே விற்பனை செய்யலாம் என்பது குறித்த விழிப்புணர்வு இல்லை. இத்த கைய மீனவப் பெண்களுக்கு அரசு ஊக்கத்தொகையுடன் பயற்சி அளித்து வருகிறார் கிரிஜா.



உதாரணமாக, நெத்திலி மீனை எடுத்துக் கொள்வோம். இந்த மீனைப் பதப்படுத்தி, சிப்பமிட்டு, வியாபாரிகளிடம்



விற்பதை விட பொதுமக்களிடம் கூடுதல் விலைக்கு விற்பனை செய்யலாம். நெத் திலி மீன் கருவாடு, சூப் பொடி உள்ளிட்ட வற்றை தயாரித்து விற்பனை செய்யலாம். மீனைக் கொண்டு பஜ்ஜி தயாரிக்கலாம். நண்டைப் பதப்படுத்தி, சூப் உள்ளிட்ட பல்வேறு பதார்த்தங்களைத் தயாரிக் கலாம். இவை குறித்து மீனவப் பெண் களுக்குப் பயிற்சி அளித்து வருகிறேன் என்கிறார் கிரிஜா.

இப் பெண்மணி, பயிற்சியாளராக இருப் பதோடு, தொழில் முனைவோ ராகவும் உள்ளார். கேழ்வரகு உள்ளிட்ட சிறு தானியங்களை மதிப்புக்கூட்டுப் பொருள் களாக மாற்றி, அவற்றை சிப்பமிட்டு, பல்வேறு பகுதிகளிலும் விற்பனை செய்து வருகிறார். இப் பொருள்களைத் தயாரிப்பதற்கு மாவட்ட தொழில் மையம் மூலம் மானியக் கடன் பெற்று இயந்



திரங்களை வாங்கியுள்ளதாகத் தெரிவிக் கிறார். இப் பொருள்களை எப்படி தயார் செய்வது என்பது குறித்து 20–க்கும் மேற்பட்டோருக்கு தனிப்பட்ட முறையில் பயிற்சி அளித்துள்ளார்.



நார்த்தங்காய் மருத்துவ குணம் கொண்டது. இதைக் கொண்டு மூலி கைப் பொடி தயாரிக்கலாம். நாங்கள் நார்த்தங்காயைக் கொண்டு இட்லிப் பொடி தயாரிக்கிறோம். குதிரைவாலி அரிசியில் பல்வேறு பதார்த்தங்கள், கேழ் வரகில் லட்டு, அல்வா உள்ளிட்டவற்றை தயாரித்து விற்பனை செய்து வருகிறோம்.

2025 ஆம் ஆண்டு ஹரியாணா வில் மகளிர் குழு சார்பில் ஒரு மாநாடு நடைபெற்றது. அதில் கண்காட்சியும் நடைபெற்றது. மாவட்டத்துக்கு ஒரு மகளிர் குழுவைத் தேர்வு செய்து அனுப் பினர். நாகை மாவட்டம் சார்பில் என்னைத் தேர்வு செய்து அனுப்பினர். பல்வேறு பதார்த்தங்களைத் தயார் செய்து கொண்டு, அந்த மாநாட்டில் கலந்து கொண்டேன். அந்த மாநாட்டில் சில



நடைமுறை சிக்கல்களைச் சந்தித் தாலும், எனது தயாரிப்புகளைப் பாராட்டி, அந்த மாநில முதல்வர் கையில் எனக்கு விருது கிடைத்தது. இது எனக்கு மிகவும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

மேலும், நாங்கள் ரயிலில் பயணித் தபோது, உடன் பயணித்த சில இளை ஞர்கள், நான் தயாரித்த இட்லிப் பொடி யை ரயிலில் பல பெட்டிகளுக்கும் எடுத்துச் சென்று, விற்பனை செய்து, 2000 ரூபாய்க்கும் மேல் ஈட்டித் தந்தனர். இதை நாகை மாவட்டத்துக்கு வந்து அதிகாரிகளிடம் தெரிவித்தேன். மொழி தெரியாத பகுதிக்குச் சென்று சாமர்த்தி யமாகச் செயல்பட்டு வந்ததாகக் கூறி, என்னைப் பாராட்டினர் என்று கூறும் கிரிஜாவுக்கு உறுதுணையாக இருப்பவர் கள் அவரது கணவர் விவசாயியான செல்வராஜ் மற்றும் அவரது மகன்.

பயிற்சியாளர் என்ற முறையில், தொழில் தொடங்குவோருக்கு அவர் கூறும் சிறிய அறிவுரை என்ன வென்றால், தொழிலைத் தொடங்கிய வுடன், கடன் பெற்று இயந்திரங்களை வாங்கி போட்டு விடாதீர்கள். இயந் திரங்கள் குறித்து நன்கு அறிந்து கொண்ட பின்னர், அவை நமக்கு உகந்த வைதானா என்பதை நன்கு புரிந்து கொண்ட பின்னர், இயந்திரங்களுக்கு ஆர்டர் செய்யுங்கள். இன்று பலர் இயந்திரங்களை முன்னரே வாங்கி விட்டு, அவற்றால் பயனில்லாமல் மிகவும் சிரமப்படுகின்றனர் என்கிறார் கிரிஜா.

பல்வேறு சவால்களைச் சந்தித் தாலும், தன்னம்பிக்கை மற்றும் விடா முயற்சி யால், தான் இந்த அளவுக்கு உயர்ந்துள் ளதாகத் தெரிவிக்கிறார் கிரிஜா மிகுந்த பெருமிதத்துடன்.

**தொடர்புக்கு –**

**91598 96079.**



# விதவிதமாய் சூரிய ஆற்றல் பயன்பாடு

**Dr. பா. இளங்கோவன்,** M.Sc., (Agri) M.B.A.,Ph.D.,
வேளாண்மை தோட்டகலைப் பயிர் சகுபடி ஆலோசகர்





நமது தமிழகத்தில் நிலவும் பருவ நிலையில் சாதகமாக சூரிய ஒளி கிடைக்கிறது. போதிய மழை கிடைப் பதும் நமது மாவட்டத்தின் சிறப்பு. சூரிய ஒளியை பலவிதங்களில் பயன் படுத்தலாம்.

## சூரிய ஆற்றல்

சூரிய ஆற்றல் என்பது பூமியில் உள்ள அனைத்து வகையான தாவரங்களுக்கும், உயிரினங்களுக்கும் தேவையான முதன்மை ஆற்றல் ஆகும். நமது நாட்டில் கிடைக்கும் சூரிய ஆற்றலின் அளவு இடத்திற்கு இடம் மாறுபடுகிறது. நமது நாட்டில் அதிகமாக பகுதிகளில் நாளொன்றுக்கு சுமார் 6 – 8 மணி நேரம் வரை சூரிய ஆற்றல் கிடைக்கின்றது. சூரிய ஆற்றலை இரண்டு வகைகளாக பிரிக்கலாம். சூரிய ஆற்றலில் கிடைக்கும் வெப்பம் என்பது ஒரு வகை. சூரிய மின்சாரம் என்பது மற்றொரு வகையாகும். விவசாயத்தில் சூரிய ஆற்றலின் வெப்ப

பயன்பாடு பழங்காலம் தொட்டே இருந்து வருகின்றது. குறிப்பாக, வேளாண் பொருட்களை உலர்த்துவதற்கு சூரிய ஒளியில் படும்படி பரப்பி உலர்த்தி வந்தனர். சூரியஒளியிலிருந்துமின்சாரம் தயாரிப்பது என்பது தற்கால விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்பாகும்.

சூரியனிடமிருந்து பெறப்படும் சூரிய ஒளியை மின்சாரமாக மாற்றுவதற்கு சோலார் போட்டோவோல்டிக் என்ற தொழில்நுட்பம்பயன்படுத்தப்படுகின்றது. இதற்காக, சூரிய மின் தட்டை பயன்படுத்தி சூரிய ஒளியை நேரடி மின்னோட்டமாக மாற்றுகின்றனர். பின்பு மின்சாரத்தினால் இயங்கும் கருவிகளை இயக்குவதற்கு இந்த மின்சாரத்தை பயன்படுத்துகின்றனர். இவ்விரு வகையான சூரிய ஆற்றல் கருவிகள் பல, தற்போது பயன்பாட்டில் உள்ளன. வேளாண்மையில் பயன்படுத்தப்படும் சூரிய ஆற்றலால் இயங்கும் நீர் இறைக்கும் பம்பு, பூச்சியைக் கட்டுப் படுத்துவதற்கு பயன்படுத்தப்படும் பொறி, மின்வேலி மற்றும் கூடார உலர்த்தி போன்றவற்றை பற்றிப் பார்ப்போம்.

## சூரிய ஒளி ஆற்றலால் இயங்கும் நீர் இறைக்கும் கருவி

விவசாயத்தில் தண்ணீரின் பங்கு மிகவும் இன்றியமையாதது. விவசாயத் திற்குத் தேவையான நீரை ஆற்றுப் பாசனம், கிணற்றுப் பாசனம் அல்லது ஆழ்குழாய் கிணற்றுப்பாசனம் மூலமே அளிக்கப்படுகிறது. இதற்கு, நீர் இறைக்கும் மின்சார பம்புகளே அதிகமாக பயன்படுத்தப்படுகின்றன. இப்போது விவசாயிகளின் மத்தியில் சூரிய ஒளியினால் இயங்கக்கூடிய நீர் இறைக்கும் பம்பு மிகவும் பிரபலமாகி வருகின்றது. இந்த வகை பம்பில், சூரிய மின்தட்டுகள், மின்மாற்றி, நீர் இறைக்கும் பம்பு போன்றவை முக்கியமான பாகங்களாகும். பம்பின் குதிரைத் திறனுக்கு தேவையான அளவு மின் சாரத்தை சூரிய மின்தட்டுகள் தயாரித்து வழங்கும். மேலும், சூரிய மின் தட்டுகளின் எண்ணிக்கையானது பம்பின் மின்சாரத் தேவைக்கு ஏற்ப மாறுபடும். சூரிய மின்தட்டுகளானது நேரடி மின்னோட்டத்தை மட்டுமே தயாரித்து வழங்குகின்றது. நாம் நேரடி மின்னோட்டத்தை பயன்படுத்தியோ, மாறுதிசை மின்னோட்டத்தை பயன்படுத்தியோ நீர் இறைக்கும் பம்பை இயக்கலாம். இயங்கும் பம்பை பயன்படுத்தினால், மாறுதிசையாக்கி மிகவும் அவசியமானதாகும். மின்னோட்டத்தை மாறுதிசை மின்னோட்டமாக மாற்றுகின்றது. இவ்வகையான மாறுதிசையாக்கியின் பங்கானது சூரிய மின்தட்டுகளில் உற்பத்தியாகின்ற நேரடி பம்புகளின் குதிரை சக்தி திறனைப் பொறுத்து அதன் விலையும் ஒரு இலட்சத்தில் இருந்து பத்து லட்சம் ரூபாய் வரை இருக்கும். தோராயமாக ஒரு குதிரை சக்தி கொண்ட இவ்வகை நீர் இறைக்கும் கருவி மூலம், நூறு அடி ஆழ்குழாய் கிணற்றில் இருந்து தண்ணீரை இறைக்க முடியும்.

## சூரிய சக்தி மின்வேலி

வேளாண் பயிர்களை வன விலங்குகளிடமிருந்து பாதுகாக்க சூரிய மின்வேலியை பயன்படுத்தலாம். சூரிய மின்தட்டுகள், மின்கலம் மற்றும் கம்பி வேலி ஆகியவை சூரிய மின்வேலியின் பாகங்களாகும். இந்த மின்வேலியில் மின்சாரம் ஒரு குறிப்பிட்ட கால இடைவெளிவிட்டு சென்று கொண்டு இருக்கும். இதனால் விலங்குகள் மின் வேலியை தொடும்போதும் அல்லது உள்ளே நுழையும் போதும் மின்சாரம் தாக்கும். அப்போது விலங்குகளை நிலைகுலைய செய்வதுடன் பயத்தை உருவாக்கி மீண்டும் வராமல் இருக்கச்



செய்யும். சூரிய மின்வேலியில் தகுந்த கால இடைவெளி விட்டு மின்சாரம் பாய்வதால் வனவிலங்குகளுக்கு எந்த வித உயிர்சேதமும் நிகழாது. ஆனால் சில விவசாயிகள் அறியாமை காரணமாக மின்சார சக்தியை அதிகம் பயன்படுத்தினால் மனித உயிருக்கே பேராபத்து வரும்.

## சூரிய சக்தி பூச்சிபொறி

வேளாண்மையில் விளைச்சலை குறைக்கக்கூடிய காரணிகளால் மிக முக்கியமானது பூச்சி தாக்குதல் ஆகும். இதன் காரணமாக விவசாயிகள் பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்துவதற்கு பல் வேறு முறைகளை கையாளுகின்றனர். இப்போது பூச்சி தாக்குதலைக் கட்டுப்படுத்துவதற்கு சூரிய பூச்சி பொறி ஒரு தீர்வாக உள்ளது. இக்கருவியானது சூரிய மின்தட்டு, மின்கலம், பூச்சிகளை கவர ஒரு மின்விளக்கு மற்றும் பூச்சிகளை பிடிக்க தண்ணீர் நிரப்பிய ஒரு தட்டு ஆகிய பாகங்களை கொண்டது. பகல் நேரத்தில் சூரிய ஒளி படும்படி இக்கருவியை வைத்துவிட்டால் சூரிய மின்தட்டானது, மின்சாரத்தை தயாரித்து மின்கலத்தில் சேமிக்கிறது. இரவு நேரத்தில் கருவியின் மின்விளக்கு எரிவதற்கு தேவையான மின்சாரத்தை மின்கலத்திருந்து பெறுகின்றது. இக் கருவியிலிருந்து வரும் வெளிச்சம் பூச்சிகளை கவர்கின்றது. அப்படி வருகின்ற பூச்சிகள் மின்விளக்கிற்கு கீழே உள்ள தண்ணீர் நிரம்பிய தட்டில் விழுகின்றன. அந்த தண்ணீரில் நான்கு துளி மண்ணெண்ணெய் அல்லது எஞ்சின் ஆயில் கலந்து வைப்பதால் அதில் விழும் பூச்சிகள் செத்து விடுகின்றன. இந்த கருவி, நெல், பயறு வகைகள் மற்றும் தோட்டக்கலை




பயிர்களான தக்காளி, வெண்டை, கத்திரி மற்றும் மிளகாய் போன்ற பயிர்களுக்கு ஏற்றது. இக்கருவியைக் கொண்டு அந்துப் பூச்சிகள், தத்துப் புச்சிகள், வண்டுகள் மற்றும் தத்துப் பூச்சிகளை கொல்லலாம். மேலும், ஒரு ஏக்கருக்கு பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த ஒரு கருவி போதுமானது. இதன் விலை சுமார் 4,500 ஆகும்.

## சூரிய கூடார உலர்த்தி

வேளாண் பொருட்களில் ஈரப்பதம் பெரும்பாலும் சற்று அதிகமாகவே இருக்கும் வேளாண் பொருட்களை, உலர்த்தாமல் சேமிப்புக் கிடங்கில் பாதுகாத்து வைத்தால் பூஞ்சைகள் தாக்கி உணவுப் பொருட்களின் தரம்



குறைகிறது. அதிகப்படியான ஈரப் பதத்தை வேளாண் பொருள்களிலிருந்து நீக்கு வதற்கு பல்வேறு உலர்த்தும் முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. சூரிய ஒளி மூலம் திறந்தவெளியில் உலர்த்தும் முறையில் செலவு மிகக் குறைவாக இருந்தாலும், உலர்த்தப் படுகின்ற வேளாண் பொருட்களின் தரம் குறைவது மட்டுமில்லாமல் அதன் விலை குறை கின்றது. சூரிய உலர்த்தி வகை களில் சூரிய கூடார உலர்த்தியானது விவசாயி களிடையே மிக பிரப லமாக உள்ளது. இது அரைவடிவ கூடாரம் போன்ற அமைப் புடன் இருக்கும். அரை வடிவ கூடார அமைப்பு, கதவு, காற்று உள் செல்லு வதற்கான வழி. கூடாரத்திலிருந்து ஈரக் காற்று வெளியே செல்ல சிம்னி போன்ற அமைப்பு, உலர்த்தியில் உள்ள கான்கிரீட் தளம் அல்லது கரப்பு வண்ணம் பூசப்பட்ட கடப்பாகல் அமைப்பு (வேளாண் பொருட்களை பரப்பி காயவைப்பதற்கு) போன்றவை சூரிய கூடார உலர்த்தியின் முக்கிய பாகங்களாகும். அரை வடிவ கூடாரமானது புற ஊதாக்கதிர்கள் உட்புகாத பாலி எத்திலீன் (200 um தடிமன்) தாளைக் கொண்டு அமைக்கப் பட்டிருக்கும். இந்த பாலி எத்திலீன் தாளானது, குறைந்த அலை நீளங் கொண்ட சூரிய ஒளிக்கதிர்களை உள்ளே செலுத்தி அதிக அலை நீளங் கொண்ட ஒளிக்கதிர்களாக மாற்று கின்றது. மேலும், அவை அதிக அலை நீளங்கொண்ட கதிர்களை வெளியே செல்ல அனுமதிப்பதில்லை. அதனால் கூடாரத்தின் உள்ளே வெப்பம் அதிகமாக இருக்கும். இதில் வெளிப்புற வெப்ப நிலையைவிட கூடார உலர்த்தியின் உள்ளே வெப்பநிலையாது 10–20c அதிகமாக இருக்கும். இந்த கூடார உலர்த்தியில் கொப்பரைத் தேங்காய், கறிவேப்பிலை, வெங்காயம், மிளகாய், பூண்டு மற்றும் அனைத்து வேளாண் பொருட்களையும் உலர்த்தலாம். சூரிய உலர்த்திகளில் உலர்த்தப்படுகின்ற வேளாண் பொருட்கள் நல்ல விலைக்கு விற்கப்படுவதால் அதிக வருமானமும் கிடைக்கின்றது. 60 அடி நீளம் × 12 அடி அகலம் × 6 அடி உயரம் கொண்ட சூரிய கூடார உலர்த்தியை அமைக்க சுமார் ரூ.2,00,000/– (கான்கிரீட் களம் நீங் கலாக) ஆகின்றது.



# வேளாண் ஏற்றுமதியில் தேவைப்படும் கொள்கை மாற்றங்களும் சந்தை அளவிளான விரிவாக்க முயற்சிகளும்




**முனைவர் தி.ராஜ் பிரவின்**

*இணைப் பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்) தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், மலரியல் ஆராய்ச்சி நிலையம், தோவாளை–629 302*

*நமது வேளாண் ஏற்றுமதி சந்தைகளில் கடந்த சில ஆண்டுகளில் மிகப் பெரிய அளவிலான மாற்றங்கள் ஏற்பட்டு வருகிறது. குறிப்பாக உள்ளூர் மற்றும் உலகம் முழுவதும் ஏற்பட்டு வரும் பருவ நிலை மாற்று பிரச்சனைகள் (CLIMATE CHANGE ISSUES ) மற்றும் வேளாண் சந்தையில் விலை, ஏற்ற இறக்கங்களை போன்றவை நமது வேளாண் சந்தைகளிலும் அதிக அளவில் தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது. மறுபுறம் தற்போதைய நடைமுறை சூழலில் முந்தைய பாரம்பரிய ஏற்றுமதி செய்யப்படும் வேளாண் பொருட்கள் பல தொடர்ந்து வந்தாலும் தற்போது வெளி நாட்டு சந்தைகளில் தேவைகளுக்கு ஏற்ப நமது வேளாண் சார்ந்த விளை பொருட்ளை மதிப்பு கூட்டியும், பதப்படுத்தப்பட்டும் அதிகளவில் ஏற்றுமதி செய்யப்படுகிறது. கடந்த பத்தாண் டுகளில் உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் உள்ள பலவேறு தடைகள், கொள்கை மாற்றங்கள், இடையூறுகளை தாண்டியும் பல புதிய நாடுகள்,வேளாண் சந்தைகளுக்கு நமது வேளாண் விலை பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படுவது உயர்ந்தே காணப்படுகிறது. கடந்த 2015 முதலான வேளாண் சார்ந்த ஏற்றுமதி புள்ளி விபரங்களை பார்க்கும் போது தற்போது ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களின் எண்ணிக்கை 298 என்ற அளவில் இருந்து வெகுவாக உயர்ந்து தற்போது 2026ல் 438 பொருட்கள் ஏற்றுமதி செய்யப் படுகிறது. பல சிறப்பு தயாரிப்புகள் (NICHE PRODUCTS) வெளிநாடுகளில் உருவாகியுள்ள புதிய சந்தை வாய்ப்புக்கள் அடிப்படையில் உற்பத்தி செய்யப் பட்டு, ஏற்றுமதி செய்யபடுகிறது.தற்போதைய ஏற்றுமதி சந்தைகளின் தேவைகளை நிறைவு செய்யவும், அதனை பன்முகப்படுத்தவும் (DIVER SIFICATION) மூன்று வகையிலான முயற்சிகள் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.*

புதிய வகையான பொருட்கள் ஏற்றுமதி, புதிய சந்தைகளை தேடி பொருட்களை ஏற்றுமதி செய்வது மற்றும் மதிப்பு கூட்டி விற்பனை செய்வது போன்ற செயலாக்கங்கள் வாயிலாக இந்திய வேளாண் பொருட்கள். ஏற்றுமதி என்பது தற்போது உலகளவில் மிள திறன் கொண்ட தாகவும் (RESILENT) மற்றும் உலக சந்தையில் போட்டி போடும் திறன் கொண்ட தாகவும் உருவாகி உள்ளது.

## அரிசி ஏற்றுமதி புள்ளி விபரங்கள்




நமது நாட்டின் வேளாண் மற்றும் ஏற்றுமதி மேம்பாடு ஆணையத்தின் (APEDA) புள்ளி விபரங்களை பார்க்கும் போது தற்போதைய 2025 – 26 புள்ளி விபரங்களின் படி 21.57 மில்லியன் டன்கள் பாசுமதி அரிசி சுமார் 11.54 மில்லியன் டாலர்க்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இது கடந்த வருட புள்ளி விபரங்களை பார்க்கும் போது அதிகரித்து காணப்பட்டாலும் மதிப்பின் அடிப்படையில் குறைந்தே காணப்படுகிறது. அனால் நமது மத்திய அரசின் வர்த்தக துறையின் புள்ளி விபரங்களை கானும் போது நமது அரிசி ஏற்றுமதிகளின் மதிப்பு தற்போதைய மே 2026 ல் 5 சதவீதம் உயர்ந்து 1.02 பில்லியன் டாலர் என்ற அளவிற்கு உயர்ந்துள்ளது. அடுத்தாக நமது வேளாண் சார்ந்த ஏற்றுமதிகளில் கடல் உணவுப் பொருட்கள் (MARINE PRODUCTS ) ஏற்றுமதி என்பது தற்போதைய காலக்கட்டத்தில் 728 மில்லியன் டாலர்கள் என்ற அளவில் கடந்த ஆண்டை காட்டிலும் (730 மில்லியன் டாலர்கள்) சற்று குறைந்துள்ளது. இது போல வாசனை பொருட்கள் 403 மில்லியன் டாலர்களாகவும், பழங்கள் மற்றும் காய் கறிகள் ஏற்றுமதி 309 மில்லியன் டாலர்களாகவும், எண்ணெய் வித்துக்கள் 103 மில்லியன் டாலர்களில் இருந்து 94 மில்லிலியன் டாலர்களாகவும், தேயிலை ஏற்றுமதி 66 மில்லியன் டாலர்களில் இருந்து 56 மில்லியன் டாலர்கள் என்ற அளவில் குறைந்துள்ளது. மற்றும் வேளாண் பொருட்களின் கீழ் பதிவு செய்யப்பட்ட இறைச்சி, பால் மற்றும் பால் சார்ந்த பொருள்கள், மற்றும் கோழித் தொழில் சார்ந்த பொருட்கள் ஏற்றுமதி என்பது கடந்த ஆண்டை காட்டிலும் கணிசமாக உயர்ந்துள்ளது. 630 மில்லியன் டாலர்கள் என்ற அளவிலும், தானிய தயாரிப்புகள் மற்றும் பிற பதப்படுத்தப்பட்ட உணவு தயாரிப்புகள் ஏற்றுமதி கடந்த ஆண்டு ஏற்றுமதி அளவை விட உயர்ந்துள்ளது. முந்தைய 265 மில்லியன் டாலர்கள் என்ற அளவை விட உயர்ந்து 277 மில்லியன் டாலர்கள் அளவிலும், காபி ஏற்று மதிகள் 209 மில்லியன் டாலர்கள் என்ற அளவிலும், எண்ணெய் புண்ணாக்கு என்பது 89 மில்லியன் டாலர்கள் என்ற அளவை காட்டிலும் உயர்ந்து 111 மில்லியன் டாலர்கள் என்றும் காணப்பட்டது.

## சந்தை அடிப்படையிலான விரிவாக்க முயற்ச்சிகள்

தற்போது நமது உள் நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளில் தேவைகள், வர்த்தக மற்றும் வணிக வாய்ப்புகள் அடிப்படையில் நமது தற்போதைய விரிவாக்கப் பணிகளை சந்தை (MARKET LED EXTENSION ) அடிப்படையில் மாற்றி அமைப்பது அவசியம். தற்போதைய ஏற்றுமதி சந்தைகளின் தேவைக்கேற்ப நமது வேளாண் விளைப் பொருட்களை உற்பத்தி செய்யும் வண்ணம் ரகங்களை தேர்வு செய்தும், சாகுபடி பணிகளை மேற்கொள்வது அவசியம். மேலும் தற்போது உலகளவிலும், நமது

தேசத்திலும் பரிந்துரைக்கப்பட்ட நல்ல விவசாய நடைமுறைகள் (GOOD AGRICULTURAL PRACTICES) பின்பற்றி சாகுபடி செய்யும் போது மிகவும் ஆரோக்கியமான பாதுகாப்பான உணவை நம்மால் உற்பத்தி செய்ய முடிவதுடன், சுற்றுச் சூழலுக்கு எந்த விதமான பாதிப்பு இல்லாமல் நம்மால் செயல்பட முடியும். மேலும் நமது ஏற்றுமதி சந்தைகளின் தேவைக் கேற்பவும் நமது வேளாண் விளைப் பொருட்களை உற்பத்தி செய்தும் பதப்படுத்தியும், மதிப்புகூட்டி விற்பனை செய்யும் கிராமபுறங்களில் புதிய வேலை வாய்ப்புகள், ஏற்றுமதி வாயிலாக அதிகளவு அந்நிய செலவாணி (FORIEGN EXCHANGE) பெற முடியும். தற்போது அரிசி ஏற்றுமதிகளில் பாஸ்மதி அரிசியை போல் பல பாஸ்மதி அல்லாத பாரம்பரிய அரிசி வகைகளுக்கு (TRADITIONAL FOLK VARIETIES) உள்நாட்டிலும், வெளி நாடுகளிலும் நல்ல விற்பனை மற்றும் வணிக, வர்த்தக வாய்ப்புகள் உள்ளது. தற்போதைய நம்முடைய பல பருவ மாற்று பிரச்சனைகளுக்கு நல்ல தீர்வாகவும், மிகவும் குறைந்தளவு வேளாண் இடுபொருட் களை கொண்டு உற்பத்தி செய்யப்படும் இப் பாரம்பரிய ரகங்கள் சாகுபடி ஊக்குவித்தும், முறைப்படுத்தியும், விஞ்ஞானரீதியாக பதப்படுத் தியும், மதிப்புக் கூட்டி விற்பனை செய்யும் முயற்சிகளில் நமது விவசாய சங்கங்கள், சுய உதவிக் குழுக்கள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் (FARMER PRODUCER ORGA-NIZATIONS) மற்றும் வங்கிகள், காப்பீடு நிறுவனகள், வேளாண் சார்ந்த ஏற்றுமதி நிறுவனங்கள் இணைந்து செயல்பட்டால் நமது மாநிலம் மற்றும் நமது தேசத்தில் உள்ள பல மாநிலங்களில் இருந்து மிகவும் எளிதாக, தரமான வேளாண் மற்றும் சார்ந்த பொருட்களை ஏற்றுமதி செய்து அதிகளவில் லாபம் பெற முடியும்.

தற்போது மத்திய மற்றும் மாநில அரசுகள் புவி சார் குறியீடு (GEOGRAPHIC INDICATION ) கொண்ட வேளாண் மற்றும் சார்ந்த பொருட் களுக்கு அதிகளவில் முக்கியத்துவம் வழங்கி செயல்பட்டு வருகிறது. இத்தகைய பொருட் களுக்கு உள் நாட்டு சந்தைகளிலும், வெளி நாடுகளிலும் அதிகளவு வர்த்தக வாய்ப்புகள் உள்ள சூழலில் நமது விரிவாக்க முயற்ச்சிகள் இவற்றை அதிகளவில் உற்பத்தி செய்து சந்தைகளின் தேவையின் அடிப்படையில் ஏற்றுமதிகள் செய்ய வேண்டியது அவசியம்.

இறுதியாக தற்போதைய வேளாண் விளைப் பொருட்களுக்கு மத்திய மற்றும் மாநில அரசுகள் அறிவிப்பது போல குறைந்தபட்ச ஆதரவு விலை (MINIMUM SUPPORT PRICE) போல் நமது விவசாயிகள், தொழில் முனைவோர், மற்றும் ஏற்றுமதியாளர்களின் நலன்களை கருத்தில் கொண்டும், உள் நாட்டு சந்தை விலை நிலவரங்கள், சந்தைகளின் வரத்துகள் மற்றும் தேவைகளின் அடிப்படையில் பருவம் தோரும், அல்லது வேளாண் சார்ந்த விளைப் பொருட்களின் தன்மைக் கேற்ப குறைந்தபட்ச ஏற்றுமதி விலையை (MINIMUM EXPORT PRICE ) நிர்ணயம் செய்தும், நடைமுறைப்படுத்துவது காலத்தின் கட்டாயமாகும். இவ்வாறு நம்முடைய வேளாண் ஏற்றுமதிக்கு தேவைப்படும் புதிய அளவிலான கொள்கை மாற்றங்கள், சந்தை அடிப்படையிலான விரிவாக்க முயற்சிகளை நாம் மேற்கொள்ளும் போது நம்மால் நம்முடைய வேளாண் விளைப்பொருட்களை பதப்படுத்தியும், மதிப்பு கூட்டியும் உலகம் முழுவதும் உள்ள பல நாடுகளின் வேளாண் சந்தைகளுக்கு நல்ல தரமான பொருட்களை நல்ல விலைக்கு ஏற்றுமதி செய்து நமது விவசாயிகள் மற்றும் கிராமபுற பொருளதாரம் உயர வழி வகை செய்ய முடியும் என்பதில் சந்தேகம் இல்லை.





திருமதி சாரதா
திருமதி பொன்மணி

# வெற்றி(லை) கொடி கட்டும் தோழிகள்

தேனி மாவட்டம், விளைபொருள் களுக்குப் பெயர் போன மாவட்டம். பல்வேறு வகையான பயிர்கள் கலவையாக இம் மாவட்டத்தில் பயிரிடப் படுகின்றன. தொழில் நிறுவனங்களைக் காட் டிலும், வேளாண்மையே இந்த மாவட்டத்தில் பிரதானம்.

இயற்கை சூழ்ந்துள்ள இந்த மாவட்டத்தில் அமைந்துள்ளது சின்னமனூர். இங்கு திருமதி சாரதா (வயது 29) மற்றும் திருமதி பொன்மணி (36) ஆகிய இருவரும் தோழிகள். பட்டதாரிப் பெண்கள். இவர்கள் இருவரும் சேர்ந்து வெற்றிலையில் மதிப்புக் கூட்டுப் பொருள்களைத் தயாரித்து, உள்ளூரிலும், பிற நிறுவனங்கள் மூலம் வெளிநாடுகளுக்கும் அனுப்பி வருகின்றனர். இவர்கள் இருவரும் இத் தொழிலை ஆரம்பித்து, ஒரு வருடமே ஆனாலும், பல்வேறு இடங் களிலும் பரவலாக பிரபலமாகி வருகின்றனர்.

இவர்கள் செய்யும் தொழில் குறித்தும் இவர்களது நோக்கம் என்ன என்பது குறித்தும் இருவரும் வேளாண் வணிக இதழுக்கு அளித்த பேட்டி இதோ.

நாங்கள் இருவரும் பி.காம். பட்டதாரிகளாக இருந்தாலும், அரசு வேலைக்கோ, தனியார் நிறுவனங்களுக்கோ சென்று வேலை செய்ய

விரும்பவில்லை. நாம் வசிக்கும் பகுதியில் என்ன தொழில் செய்யலாம் என யோசித்தோம். அப்போது எங்களுக்கு மிகவும் உதவியாக இருந்தது கே.வி.கே. எனப்படும் கிஷன் விஞ்ஞான் கேந்திரா. இதில் வேளாண் அலுவலராக இருப்பவர் திருமதி ரம்யா. இவர், தொழில் செய்வதற்கு எங்களை மிகவும் ஊக்கப் படுத்தினார், ஊக்கப்படுத்தியும் வருகிறார்.

நாங்கள் வசிக்கும் பகுதி வேளாண் சார்ந்த பகுதி என்பதால், வேளாண் பொருள்களில் மதிப்புக் கூட்டப்பட்ட பொருள்களைத் தயாரித்து விற்பனை செய்ய முடிவு செய்தோம். தற்போது 5 ஏக்கர் பரப்பளவில் நிலத்தை குத்தகைக்கு எடுத்து, அதில் வாழை, வெற்றிலை, கற்பூரவள்ளி, தூதுவளை ஆகியவற்றைப் பயிரிட்டு வருகிறோம்.

வெற்றிலையில் ஓமம், சித்தரத்தை, கற்பூ ரவள்ளி, தூதுவளை ஆகியவற்றைச் சேர்த்து சளி பவுடர் தயாரித்து விற்பனை செய்கிறோம். அதுபோல, வெற்றிலை பவுடர் தயாரித்து, உள்ளூர்



நிறுவனத்துக்கு விற்பனை செய்கி றோம். அவர்கள், அதை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகின்றனர். இத்தகைய பொருள்களைத் தயாரிக்க, கே.வி.கே. மூலம் சோலார் டிரையர் பெற்றுள்ளோம். அந்தக் கருவி எங்களுக்குப் பெரிதும் உதவியாக உள்ளது. வெற்றிலையின் மூலம் பீடா தயாரித்து விற்பனை செய்து வருகிறோம். வெற்றிலைக் கொடிக்காலில் ஊடு பயிராக முருங்கை, அகத்தி ஆகியவற்றைப் பயிரிட்டுள்ளோம். இவற்றை வீணாக்காமல், முருங்கைப் பவுடர் உள்ளிட்ட மதிப்புக்கூட்டப்பட்ட பொருள்களைத் தயாரித்து விற்பனை செய்கிறோம். இவற்றைக் கொண்டு சூப், மிக்ஸ் ஆகியவற்றை தயாரித்து வருகிறோம்.

வெற்றிலைப் பவுடர் தயாரிக்க, 10 கிலோ வெற்றிலையைக் காய வைத்து அரைத்தால், ஒரு கிலோ பவுடர் கிடைக்கும். ஒரு கிலோ பவுடர் ரூ.250–க்கு விற்பனை செய்யப்படுகிறது. நாங்கள் 10 கிலோ பவுடரை ரூ.1,500–க்கு விற்பனை செய்து வருகிறோம். ஒரு மாதத்துக்கு சுமார் 50 கிலோ முருங்கைப் பவுடர் தயாரிக்கிறோம்.

வெற்றிலையைக் கொண்டு விசேஷங் களுக்கு வெல்கம் டிரிங்க தயாரித்து கொடுக்கிறோம். இந்த டிரிங்கை ஒரு பாட்டில் ரூ.12–க்கு விற்பனை செய்கிறோம். வெற்றலைச் சாறு, தேன், வெது வெதுப்பான நீர் ஆகியவற்றைக் கொண்டு இந்த வரவேற்பு பானத்தைத் தயாரிக்கிறோம். இதற்கு பொதுமக் களிடையே நல்ல வரவேற்பு உள்ளது.

இவைதவிர, ஆவாரம் பூ, கொய்யா, பீட்ரூட், தக்காளி ஆகியவற்றைக் கொண்டு பல்வேறு மதிப்புக்கூட்டுப் பொருள்களைத் தயாரித்து வருகிறோம். எங்களது தயாரிப்புகள் தற்போது பல்வேறு பகுதிகளிலும் பிரபலமடைந்து வருகின்றன. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் அனுப்பி வருகிறோம். வருமானம் நன்றாகவே உள்ளது. எனது தோழியும் நானும் மட்டுமே தற்போது இத் தொழிலில் ஈடுபட்டு வருகிறோம்.

எங்களது நோக்கம், பெண்கள் இதுபோன்ற தொழில்களைத் தொடங்க முன்வர வேண்டும். தங்களது சொந்தக் காலில் நிற்க வேண்டும் என்பதாகும். இதற்கு எங்களால் முடிந்த முயற்சிகளை மேற்கொள்வோம் என்று ஒருமித்த குரலில் தெரிவித்தனர் தோழிகளான திருமதி சாரதா மற்றும் திருமதி பொன்மணி.

**தொடர்புக்கு – 918098533383.**


இயற்கையுடன் இணைந்து...
ஆரோக்கியமாக வாழ்வோம்...
IYARKAI VALAM
FOOD PRODUCTS
100% NATURAL
NO PRESERVATIVES
NO CHEMICALS
காய்கறி மற்றும் கீரைகள் சார்ந்த பொருட்கள்
தானியங்கள் (ம) தானியப் பொருட்கள்
பருப்பு வகை உணவுப்பொருட்கள்
பழத்தயாரிப்புகள்
பால் சார்ந்த பொருட்கள்
எண்ணெய் வகைகள்
PURE by NATURE
MADE with CARE
IYARKAI VALAM
இயற்கை வளம்
8056395483
channelscan@gmail.com
https://www.facebook.com/share/1Hfqwh9eYL/
UDYAM REGISTRATION NUMBER
UDYAM-TN-12-0182750
SUPPORT LOCAL
THINK GLOBAL

# திண்டுக்கல் மாவட்டம்

## கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில்

### கால்நடைகளுக்கான கால் மற்றும் வாய் காணை நோய் தடுப்பு சிறப்பு முகாம்கள்,

**01.07.2026 முதல் 10.08.2026 வரை**

அனைத்து கிராம ஊராட்சிகளிலும் நடைபெறவுள்ளது –

**மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி துர்காமூர்த்தி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் கால்நடைகளுக்கான கால் மற்றும் வாய் காணை நோய் தடுப்பூசி சிறப்பு முகாம்கள், வருகின்ற 01.07.2026 முதல் 10.08.2026 வரை அனைத்து கிராம ஊராட்சிகளிலும் நடைபெறவுள்ளது.

மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி துர்காமூர்த்தி, இ.ஆ.ப., அவர்கள் தகவல். திண்டுக்கல் மாவட்ட கால்நடை பராமரிப்புத்துறை சார்பாக, தேசிய கால்நடை நோய்த தடுப்பூசிப்பணித் திட்டத்தின் கீழ், ஒன்பதாவது சுற்று கால் மற்றும் வாய் நோய் தடுப்பூசிப் பணியானது 01.07.2026 முதல் 10.08.2026 வரை 41 நாட்களுக்கு திண்டுக்கல் மாவட்டம் முழுவதும் நடைபெற உள்ளது. திண்டுக்கல் மாவட்டத்தில் மொத்தம் 2,91,700 கால்நடைகளுக்கு காணை நோய் தடுப்பூசி போடப்படவுள்ளது.7.2026 முதல் 10.08.2026 வரை அனைத்து கிராம ஊராட்சிகளிலும் நடைபெறவுள்ளது

கால் மற்றும் வாய் நோயானது, குறிப்பாக கலப்பின மாடுகளை அதிகம் தாக்கி கால்நடை வளர்ப்போருக்கு பொருளாதாரம் மற்றும் உற்பத்தி இழப்பை ஏற்படுத்துகிறது. இந்நோயினால் இறப்புகள் குறைவாக இருந்த போதிலும், கறவை மாடுகளில் பால் உற்பத்தி குறைவு, எருதுகளின் வேலைத்திறன் குறைவு, கறவை மாடுகளில் சினை பிடிப்பு தடைபடுவது, இளங்கன்றுகளின் இறப்பு போன்ற பாதிப்புகளினால் ஏற்படும் பொருளாதார இழப்பு அதிகம்.

## MSD செய்திகள்

மேலும், இந்நோய் பொதுவாக குளிர் மற்றும் பனிக்காலம், நோய் பாதிக்கப்பட்ட இடங்களில் இருந்து வாங்கி வரப்பட்ட கால்நடைகள், சுகாதாரமற்ற கால்நடை வளர்ப்பு மற்றும் கால்நடைகளுக்கு தடுப்பூசி போடாமல் இருத்தல் ஆகிய காரணங்களால் இந்நோய் விரைவாக காற்றின் மூலம் பரவும் தன்மை கொண்டது. இந்நோய் பாதிக்கப்பட்ட மாடுகளின் பால், உமிழ் நீர் ஆகியவற்றால் காற்றின் மூலம் மற்றும் தொடர்பு ஏற்படுவதன் மூலம் மற்ற கால்நடைகளுக்கு பரவுகிறது.

இந்நோய் வராமல் தடுக்கும் பொருட்டு திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள பசுக்கள், எருதுகள், எருமைகள் மற்றும் 4 மாதத்திற்கு மேற்பட்ட இளங்கன்றுகளுக்கு கால்நடை பராமரிப்புத்துறையால் அந்தந்த கிராம ஊராட்சிகளில் 01.07.2026 முதல் சிறப்பு முகாம்கள் நடத்தி தடுப்பூசி போடப்படும். ஆகவே, விவசாயப் பெருமக்கள் தங்களது கால்நடைகளுக்கு கால் மற்றும் வாய் காணை நோய் தடுப்பூசினை தவறாது செலுத்தி, பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி துர்காமூர்த்தி, இ.ஆ.ப.,அவர்கள் தெரிவித்துள்ளார்.

# வேளாண் வணிகம்

Digital Fortnightly News Magazine

## TARIFF DETAILS

### Promotion Package

- Sending 200 WhatsApp Groups
- Face Book Posting to 15 Groups Weekly
- Target Audience: Farmers / Agri Business / General Public

### Rate

**Rs. 3000 /- Only**

This includes writeup about the company too.

### Contact for Booking

Call: 8056305483

channelscan@gmail.com

# நூற்புழுக்களுக்கு எதிரான உயிரியல் போராளிகள்

கட்டுரை வழங்குபவர்
Arulmani ADH
MADURAI
மேலும் தகவல் மற்றும் சந்தேகங்களுக்கு
8056185081

## Pochonia chlamydosporia மற்றும் Purpureocillium lilacinum – நீடித்த வேளாண்மைக்கான நிலையான தீர்வு

பயிர் சாகுபடியில் உற்பத்தியை பாதிக்கும் காரணிகளில் நிலையற்ற தட்பவெப்ப சூழ்நிலை, பூச்சி மற்றும் நோய் தாக்குதல், களைகள் மட்டு மல்லாமல் கண்களுக்குப் புலப்



படாத நூற்புழுக்களும் முக்கிய பங்கு வகிக் கின்றன. மண்ணில் வாழும் இந்நுண் ணுயிர் போன்ற விலங்குகள் தாவர வேர்களைத் தாக்கி நீர் மற்றும் ஊட்டச் சத்துக்களை உறிஞ்சும் திறனை குறைத்து, பயிர்களின் வளர்ச் சியையும் மகசூலையும் பெருமளவில் பாதிக்கின்றன.

தோட்டக்கலை பயிர்களில் சுமார் 10 – 30 சதவீதம் வரை மகசூல் இழப் பீட்டை ஏற்படுத்தும் திறன் உடையது.

## நூற்புழு (Nematode) என்றால் என்ன?

நூற்புழுக்கள் (Plant Parasitic Nematodes) என்பது மண்ணில் வாழும் மிகச் சிறிய, நீளமான, நூல் போன்ற நுண்ணுயிர் விலங்குகள் ஆகும். இவை தாவர வேர்களில் ஊசி போன்ற "Stylet" என்ற உறுப்பை நுழைத்து சாற்றை உறிஞ்சி சேதப்படுத்துகின்றன.

## முக்கிய தீங்கு விளைவிக்கும் நூற்புழுக்கள்



1. வேர்முடிச்சி நூற்புழு - Root-knot nematode (Meloidogyne spp.)
2. மொச்சை வடிவ நூற்புழு - Reniform nematode (Rotylenchulus reniformis)
3. வேர்குத்தும் நுற்புழு – Pratylenchus spp
4. சிட்ரஸ் நுற்புழு – Tylenchulus semipenetrans

5. வாழை துளைக்கும் நூற்புழு – Radopholus similis

6. சுழல் நூற்புழு – Helicotylenchus spp

இவை வாழை, தக்காளி, மிளகாய்,



கத்திரி, வெண்டை, மா, மாதுளை, பப்பாளி, கொய்யா, எலுமிச்சை உள்ளிட்ட பல பயிர்களில் கடுமையான சேதத்தை ஏற்படுத்துகின்றன.

## நூற்புழு தாக்குதலின் அறிகுறிகள்:

✓ வேர்களில் முடிச்சுகள் உருவாகுதல்

✓ வேர் வளர்ச்சி குறைதல்

✓ சத்துக்களை உறிஞ்சும் திறன் குறைதல்

✓ குன்றிய பயிர் வளர்ச்சி

✓ இலை மஞ்சளாதல்

✓ வறட்சியை தாங்கும் திறன் குறைதல்

✓ பூ மற்றும் காய் உதிர்தல்

✓ மகசூல் குறைதல்

நூற்புழு தாக்குதலின் அறிகுறிகள் ஊட்டச்சத்து குறைபாட்டு அறிகுறிகளை ஒத்து இருப்பதால் அளவுக்கு அதிகமாக உரம் இடுதலை தவிர்த்து நூற்புழு தாக்குதல் உள்ளதா என்பதை கண்டறிந்து அதற்கேற்றவாறு உயிரியல்


முறையில் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**உயிரியல் முறையில் நூற்புழுக்களை கட்டுப்படுத்துதல்:**

நூற்புழுக்களை கட்டுப்படுத்த பிரதானமாக இரண்டு பூஞ்சாணங்கள் பயண்படுத்தப்படுகிறது.

1. Pochonia chlamydosporia
2. Purpureocillium lilacinum






**முக்கிய வேறுபாடுகள்**

| அம்சங்கள் | *Pochonia chlamydosporia* | *Purpureocillium lilacinum* |
|---|---|---|
| முக்கிய இலக்கு | நூற்புழு முட்டைகள் | நூற்புழு முட்டைகள் + பெண் நூற்புழுக்கள் |
| செயல்படும் வேகம் | மிதானமாக (நீண்டகால தாக்கம்) | விரைவாக (விரைவு தாக்கம்) |
| வேர் மண்டல குடியேற்றம் | சிறந்தது நீண்டகால நிலைக்கும் | மிதானமானது |
| முக்கிய நொதிகள் | அதிக Chitinase | அதிக Protease |
| இரண்டாம் நிலை நச்சப் பொரட்கள் | குறைவு | அதிகம் |
| Root-knot nematode கட்டுப்பாடு | சிறந்தது | சிறந்தது வேகமான தாக்கம் |
| அம்சங்கள் | *Pochonia chlamydosporia* | *Purpureocillium lilacinum* |
| Cyst Nematode கட்டுப்பாடு | மிகவும் சிறந்தது | மிதானமானது |
| தாவர வளர்ச்சி ஊக்குவித்தல் (LAA, Phosphate solubilisation) | அதிகம் | மிதானமானது |
| மண்ணில் நீடிக்கும் திறன் | அதிகம் | மிதானமானது |

## பயன்படுத்துவதால் கிடைக்கும் நன்மைகள்

நூற்புழு முட்டைகள் மற்றும் பெண் நூற்புழுக்களை அழிக்கிறது.

- ✓ வேர் ஆரோக்கியத்தை மேம்படுத்துகிறது.
- ✓ பயிரின் வளர்ச்சி மற்றும் மகசூலை அதிகரிக்கும்.
- ✓ இரசாயனப் பயன்பாட்டை குறைக்க உதவுகிறது.
- ✓ பயன்படுத்தும் போது கவனிக்கப்பட வேண்டியவை




- ✓ முழு பலன் பெற மண்ணனை ஈரப்பதமாக வைத்திருங்கள்.
- ✓ நேரடி வெயிலில் இருந்து பாதுகாக்கிறது.
- ✓ பயன்படுத்தும் முன் லேபிளில் உள்ள வழிமறைகளை பின்பற்றவும்.

## முடிவுரை:

நூற்புழுக்கள் கண்களுக்குப் புலப்படாத எதிரிகள் என்றாலும், அவை ஏற்படுத்தும் இழப்பு மிகப் பெரியது. இவற்றை கட்டுப்படுத் *Pochonia chlamydosporia* மற்றும் *Purpureocillium lilacinum* போன்ற நன்மை பயக்கும் பூஞ்சாணங்களை பயன்படுத்துவது சுற்றுச்சூழலுக்கு உகந்த, அறிவியல் பூர்வமான மற்றும் பொருளாதார ரீதியாக பயனுள்ள தீர்வாகும்.

மண் வளத்தை காக்கும் இந்த உயிரியல் தொழில்நுட்பங்களை விவசாயிகள் பரவலாக ஏற்றுக் கொள்வதே எதிர்கால நிலையான வேளாண்மைக்கான முக்கிய அடித் தளமாக அமையும்.


வேளாண் வணிகம்
மாதம்
இருமுறை
வெளிவரும்
மின்னிதழ்
வேளாண் வணிகம்
விவசாயிகளின் முன்னேற்றமே
நமது இலக்கு
உங்கள் வணிகத்தை சந்தைப்படுத்தவும்,
உங்கள் தயாரிப்புகளை நேரடியாக
வாடிக்கையாளர்களிடம் கொண்டு சேர்க்கவும்
"வேளாண் வணிகம்" மின்னிதழ் வாயிலாக
மிகக் குறைந்த கட்டணத்தில்
விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்.
மாதம்
இருமுறை
வெளியீடு
"உங்களது விளம்பரம் – எங்கள் வளர்ச்சி பயணம்"
அதிக வாசகர்கள்
செல்த்தும்
நாளிதழ்
விவசாயிகள் மற்றும்
வணிகர்கள் வரை
நேரடி சென்றடையும்
உங்கள் வணிக
வளர்ச்சிக்கு சிறந்த
விளம்பர தளம்
மிகக் குறைந்த
கட்டணத்தில்
அதிக பலன்
நம்பகத்தன்மை
மிக்க மற்றும்
நிலையான சேவை
தொடர்புக்கு:
அழைக்கவும்
8056305483
நன்றி

# Green Park Smart School

## CBSE Senior Secondary School

### OUR FACILITIES

| | |
|---|---|
| GREEN CAMPUS | ROBOTICS, DRONE and AI |
| SPORTS FACILITIES | LAB FACILITIES |
| TRAINED FACULTIES | LIBRARY FACILITIES |
| INNOVATIVE TEACHING | TRANSPORT FACILITIES |

**ADMISSIONS OPEN NOW**

**REGISTER NOW**

www.greenparksmartschool.org

Scan, Apply and Get Hired !

737301 1522/33
73737 79762

SCAN ME

FOR ADDMISSION